1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மில்லனிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மில்லனிய பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 03 ஆம் அத்தியாயத்தின் 3.32 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது மிகையின் கூட்டு மொத்தம் ரூபா 72,414,514 பிழையாக சீராக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 03 அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசுப் பாய்ச்சல் கணிப்பிடும் போது கூட்டுமொத்தமாக ரூபா 36,792,461 பிழையாக சீராக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 153,076,108 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் தேறிய சொத்துக்கள் ரூபா 326,009,393 ஆக ரூபா 172,933,285 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	பேரேட்டில் திரண்ட நிதியக் கணக்கின் ஆரம்ப மீதியில் வரவு மற்றுமெ செலவுக் குறிப்புக்களில் சீராக்கம் மற்றும் ஆண்டின் மிகை சீராக்கப்பட்ட பின்னர் மீளாய்வாண்டின் இறுதியில் சரியான மீதி ரூபா 330,705,051 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது பேரேட்டுக் கணக்கில் ரூபா 326,009,393 மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் 292,126,386 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(இ)	மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கம் மற்றும் ஏற்பாடுகள் கணக்கில் ரூபா 5,338,203 பெறுமதி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கில் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்களின் கீழ் காண்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் திரண்ட நிதியத்தின் சரியான பெறுமதி ரூபா 330,705,051 ஆக காண்பிக்க வேண்டிய போதிலும் ரூபா 471,528,252 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 140,823,201 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	திரண்ட நிதியத்தின் பெறுமதி ரூபா 326,009,393 சேர்க்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	2023 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.2(ஆ) இல் குறிப்பிடப்பட்ட பிழைகளை சரி செய்யும் போது திரண்ட நிதியத்தில்	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

	ரூபா 21,620,280 சீராக்கப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியம் ரூபா 21,620,820 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஊ)	2020 ஆம் ஆண்டின் போது சபைக்குரிய சொத்துக்களுக்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளில் சீராக்கம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளும் போது சொத்துக்கள் தேறிய பெறுமதி மீள் மதிப்பீட்டுப் பெறுமதியாக இருந்ததுடன் வேறுபாடுகள் கணக்குகளில் சீராக்குவதற்குப் பதிலாக கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி இணக்கம் செய்து வேறுபாடான ரூபா 1,126,743 சொத்துக்கள் கணக்கில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(எ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வீதிகள் மற்றும் பாலங்கள், மதகுகளின் பெறுமதி ரூபா 47,302,677 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 59,691,573 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் வீதிகள் மற்றும் பாலங்கள், மதகுகளின் பெறுமதி ரூபா 12,388,896 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	மேற்படி	மேற்படி
(ஏ)	மீளாய்வாண்டின் இறுதியில் நானாவித கடன் பட்டோர் பெறுமதி ரூபா 38,112,339 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,899,244 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நானாவித கடன் பட்டோர் மீதி ரூபா 36,213,095 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஐ)	2024 ஆம் ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளில் இலக்கம் 3.5 இன் பிரகாரம் சபையினால் குறைந்து செல்லும் மீதி முறைமையில் மேற்கொள்ளப்படுவதாக பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுவதாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது நேர்கோட்டு முறையில் உரிய பெறுமானத் தேய்வு விகிதத்தின் கீழ் பெறுமானத் தேய்வு கணிப்பிட்டதன் காரணமாக விரிவான வருமானக் கூற்றில் ஆண்டின் பெறுமானத் தேய்வு	மேற்படி	மேற்படி

	செலவினம் ரூபா 2,009,113 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஓ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 12,580,860 ஆக இருந்த போதும் அது ரூபா 19,746,395 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 7,165,535 ஆரம்ப மீதி அதிகரித்தும், மீளாய்வாண்டின் இறுதியிலும் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 27,621,735 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 34,787,270 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் பெறுமதி ரூபா 7,165,535 அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்குகள் சரியாகத் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவு	சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 22 மயான நிலங்கள் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	தற்போது அளவிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1645	வாகன சம்பவத் திரட்டுப் புத்தகம் பொறுப்பு உத்தியோகத்தரினால் அறிக்கை சமர்ப்பிக்கின்ற மாதத்தின் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன் 268 (அ) பொதுப் படிவத்தில் எழுதப்பட்ட பிரயாணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்பின் மூலப் பிரதியுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 40 வாகனங்களுக்கு அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,485,061 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,445,212 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	11,190,242	11,190,241	10,379,839	859,552	4,440,600	4,025,951	4,024,801	1,150
ii.	வாடகை	-	-	-	-	342,000	189,190	189,190	-
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	298,750	298,750	305,750	-	610,050	345,750	345,750	-
iv.	ஏனைய வருமானம்	-	60,000	34,500	43,500	11,810,550	9,405,239	9,405,239	-
		------------	-------------	-----------	-------------	------------	-------------	-----------	-------------
		11,488,992	11,548,991	10,720,089	903,052	17,203,200	13,966,130	13,964,980	1,150
		=======	=======	=======	=======	=======	=======	=======	=======

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மாகாண சபையின் பிரத செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா	முத்திரைக் கட்டணம் பெறப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டில் நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை	நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

5,200,000 மற்றும் முத்திரைக் எடுக்கப்படும்.
கட்டணம் ரூபா 43,720,994 ஆகும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2023 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்புப் பெறுமதி ரூபா 203,166 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 561,844 தொகை கிடைத்திருந்ததுடன் மேலதிகமாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 358,678 தொகை தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் மேலதிகமாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 358,678 தொகை எதிர்காலத்தில் வருமானத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேலதிகமாக கிடைக்கப்பெற்ற சம்பள மீளளிப்பை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையின் கழிவுப் பொருள் தளத்தில் காணப்படுகின்ற பயன்படுத்தக் கூடிய பேல் இயந்திரம் ஒரு வருட அளவிலான காலம் பயன்படுத்தாமல் காணப்பட்டதுடன் அந்த பேல் இயந்திரத்தின் பெறுமதியை இனங்கண்டு ஏடுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பேல் இயந்திரத்தின் பெறுமதியை ஏடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இயந்திரத்தின் பெறுமதியை ஏடுகளுக்கு கொண்டு வந்து பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது பொரலஸ்கமுவ நகர சபையினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் இன்றிய கல் உருளை சபையினால் பயன்படுத்தப்படாமல் வளைவற்றுக் காணப்பட்டது.	2025 ஆம் ஆண்டின் பின்னர் நேர் ஒப்பந்த முறையின் கீழ் வீதிகள் தயாரிக்கப்படும் ஆயின் மற்றும் அதற்காக ஒப்பந்த காரரின் கோரிக்கை கிடைக்குமாயின் அதற்காக இந்த இயந்திரத்தை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	கல் உருளை பதிவு செய்து கொண்டு சபையின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கூட்டுப் பசளை உற்பத்தி செய்வதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 7,699,995 செலவில் எடுக்கப்பட்டிருந்த கூட்டுப்பசளை உர உற்பத்தி இயந்திரத்திற்கு ஒரு	உற்பத்தி செய்யப்படுகின்ற உரத்தின் அளவிற்கும் போதியளவான சந்தை ஒன்று காணப்படாது இருந்ததுடன் மேலும் உரம் உற்பத்தி செய்யப்படும்	கூட்டுப்பசளைக்காக போதியளவான சந்தை ஒன்றைக் கண்டறிய வேண்டி இருந்ததுடன் கூட்டுப் பசளை உற்பத்தி இயந்திரத்தை

	மணித்தியாலத்திற்கு 01 தொன் உரம் உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை காணப்பட்ட போதிலும் கழிவுப் பொருள் தளத்தில் உர உற்பத்தி மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.	ஆயின் அந்த உரத்தின் அளவும் ஒன்று சேர்ந்து கட்டிடத்திற்குள் முகாமைத்துவம் செய்வதற்கு பிரச்சனையாக இருந்தது.	ஆக்கபூர்வமாக பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மில்லனிய பிரதேச சபை ஸ்தாபிக்கும் போது உரித்தான கல் கிரேசர் இயந்திரம் உரியவாறு பராமரிக்கப் படாமையினால் 2018 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டதுடன் அதனை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	இயந்திரத்தை உரிய பிரகாரம் பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் இந்த இயந்திரத்தை பராமரிப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையின் இரண்டாம் நிலையில் 04 பதவிகளும், ஆரம்ப நிலையில் 01 பதவியும் வீதம் வெற்றிடமாகக் காணப்பட்டது.	வருடாந்தப் பதவியணியினர் காலாண்டு அறிக்கை மூலம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு இது தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடமான ஊழியர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 சனவரி 24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல உத்தியோகத்தருக்கும் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் ஒன்று வழங்க வேண்டிய பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஒட்டுமொத்த பதவியணியினருக்காகவும் 18 மணித்தியாலப் பயிற்சி சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.	மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட 26 நோக்கங்களின் கீழ் நிறைவேற்றுவதற்கு	2024 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 90 சதவீத	வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அதன் செயல்

எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் / செயற்திட்டங்கள் கணிசமான அளவில் காண்பிக்கப்பட்டதுடன் 2024 திசெம்பர் மாதம் வரையிலும் அதன் செயல் முன்னேற்றம் அளவிடப்பட்டிருக்க வில்லை.	அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதி வேலைகளுக்கு உரிய செயல் முன்னேற்றம் தற்போது தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.	முன்னேற்றம் அளவிடப்படல் வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
சபையினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களின் அளவுடன் ஒப்பிடும் போது கூட்டுப்பசளை உற்பத்தி மேற்கொள்ளாமையினால் கூட்டுப்பசளை உற்பத்தி விற்பனைக்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படாது இருந்ததுடன் கூட்டுப்பசளை விற்பனை கீழ் மட்டத்தில் காணப்பட்டதன் காரணமான சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் தெல்தொரவத்த கழிவுப் பொருள் தளத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.	இந்தப் பிரச்சனைகள் தொடர்பாக கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருள் கூட்டுப்பசளை உற்பத்திக்கு ஈடுபடுத்துதல் வேண்டும்.

4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 128,420,050 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலவினம் ரூபா 162,354,275 ஆனமையால் மீண்டெழும் செலவின மதிப்பீட்டிற்கும், உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் ரூபா 33,934,225 நிலுவை காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சி 26 சதவீதம் காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் ஊழியர் சம்பளம் அதிகரித்தமை மற்றும் மின்சாரம் தளம்பல்களினால் இந்த நிலைமை ஏற்பட்டு இருந்தது.	வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைத் திருத்தி அங்கீகாரத்தைப் பெறல் வேண்டும்.
(ஆ)	12 மீண்டெழும் செலவினங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 8,981,082 ஆக இருந்ததுடன் அந்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தில் எந்த ஒரு தொகையும் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருக்கவில்லை.	செலவிடாமைக்கான காரணம் காண்பிக்கப்பட்டுள்ளது.	செலவின மதிப்பீட்டை திருத்தி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
(இ)	சபையில் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா 1,134,500 ஆக இருந்ததுடன் அந்த தொகையில் 75 சதவீதத்திற்கும் அதிகமான அளவு மீளாய்வாண்டின் போதும் செலவிடப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி